# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்.180/2019/பே
ஆணை நாள்: 17–02–2020.

திரு E. கோவிந்தராஜன்,
எண்.10, திருவீதியம்மன் கோவில் தெரு,
கிருஷ்ணாபுரம்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்–603202. -- முறையீட்டு மனுதாரர்

திரு.த.குணசேகரன்,
முன்னாள் செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி.,
காஞ்சிபுரம் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி, கிருஷ்ணாபுரம், திருவீதியம்மன் கோவில் தெரு எண்.10, என்ற முகவரியைச் சேர்ந்த திரு, E.கோவிந்தராஜன் என்பவரது 30.09.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.10.2019 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.180/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், காஞ்சிபுரம் மாவட்டம், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சிக்குட்பட்ட 6–வது வார்டு கோவிந்தராஜபுரம் பகுதியில் புதியதாக கட்டப்பட்ட சந்திரசேகரன் மகால் மற்றும் பங்கஜம்மாள் திருமண மண்டபம் ஆகியவற்றிற்கு அனுமதி வழங்க அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலர் திரு.த. குணசேகரன் என்பவர் பல லட்ச ரூபாய் கையூட்டு பெற்றதாகவும், அவருக்கு உடந்தையாக காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் திரு.P.மனோகரன் செயல்பட்டு வருவதாகவும் தெரிவித்து சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இப்பொருள் தொடர்பாக புகாருக்குட்பட்ட நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும் தற்போதைய மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.த.குணசேகரன், தனது 05.11.2019 நாளிட்ட விளக்க அறிக்கையில், முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட இரு திருமண மண்டபங்கள் குறித்து திருமதி. அம்சவேணி, க/பெ திரு.எம்.என்.சந்திரசேகர் என்பவரால் கட்டிட வரைபட அனுமதி கோரி வரப்பெற்ற

மனுவினை பரிசீலனை செய்து, செங்கல்பட்டு மண்டல நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநருக்கு ஒப்புதல் வழங்க அனுப்பி வைக்கப்பட்டு, மண்டல நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு க.வ/ந.ஊ.துஇ (செ.ம)எண்01/2018 என எண்ணிடப்பட்டு, ந.க.எண். 6326/2017 செ.ம.3 நாள் 05.01.2018 நாளிட்ட ஆணையின்படி தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான இறுதி ஆணையினை பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்க உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை எண்.79/வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (ந.வ.4(3) நாள் 04.05.2017ன்படி மனையின் பரப்பிற்கு சந்தை மதிப்பீட்டின்படி 3 சதவீத தொகையினை உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிட்டுள்ளதன்படி. மேற்படி இடத்தின் வழிகாட்டு மதிப்பின்படி சதுர அடி ரூ.1005/- என தெரிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக, மொத்த சதுர அடி 26,580 க்கான தொகை மற்றும் கூராய்வுக் கட்டணம் ரூ.1000/– சேர்த்து சம்பந்தப்பட்ட நபரால் 19.08.2018ல் உரிய அரசுத் தலைப்பில் செலுத்தி, அதற்கான செலுத்து சீட்டு நகலினை சமர்ப்பித்ததாகவும், பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் கட்டிட அனுமதித் தொகை மற்றும், அதனுடன் காலியிட வரி மற்றும் நூல் நிலைய வரி, ஆக மொத்தம் ரூ. 17,90,210/–ஐ 28.02.2018ல் பேரூராட்சி நிதிக் கணக்கில் கட்டிட உரிமையாளரால் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து பேரூராட்சி கட்டிட அனுமதி எண்.139/2017–18 நாள். 28.02.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டதாகவும், இதில் முறைகேடு எதுவும் இல்லை எனவும், கையூட்டு பெற்றுக் கொண்டு அனுமதி வழங்கியது என புகார் தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றோரு அலுவலரான காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரக உதவி செயற்பொறியாளர் திரு.P.மனோகரன், தனது 08.11.2019 நாளிட்ட கடிதத்தில் பேரூராட்சி செயல் அலுவலருக்கு தான் உடந்தையாக இருப்பதாக தெரிவித்துள்ள முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டினை மறுத்துள்ளார்.

26.12.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தான் ஏற்கனவே புகார் மனுவில் தெரிவித்துள்ள கருத்துக்களையே தெரிவித்து, கூடுதலாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் திரு.த. குணசேகரன் செயல் அலுவலராக பணியாற்றிய பெருங்களத்தூர் பேரூராட்சியில் சில தகவல்களை கோரியுள்ளதாகவும், மேலும், தனது புகார்களுக்கு ஆதாரமான தகவல்களை தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்க நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் ரூ.608/– செலுத்தியுள்ளதாகவும், மேற்படி பேரூராட்சிகளிடமிருந்து தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன் அதனை சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

22.01.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும் தற்போதைய மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலருமான திரு.த.குணசேகரன் தனது வாக்குமூலத்தில், தான் மேற்படி பேரூராட்சியில் 29.01.2018 முதல் 27.09.2018 வரை பணிபுரிந்ததாகவும், தனது பணிக்காலத்தில் எந்த விதி மீறலும் நடைபெறவில்லை எனவும், மனுதாரர் நந்திவரம் கிராமத்தில் நீர்நிலை புறம்போக்கினை ஆக்கிரமித்து கொட்டகை அமைத்ததை, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் உத்திரவின்பேரில் அகற்றியதை தொடர்ந்து மனுதாரர் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல்களை பெற்று உண்மைக்கு புறம்பான புகார் மனுக்கள் எழுதி வருவதாகவும், நந்திவரம் பேரூராட்சியில் தற்காலிக அடிப்படையில் ஒப்பந்தப் பணியாளராக பணிபுரியும் கணினி இயக்குநர் திரு.முரளி என்பவர் இது போன்ற புகார்களை பேரூராட்சி அலுவலக கணினியில் தயாரித்து கொடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கைகள் மற்றும் முறையீட்டு மனுதாரர், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.த.குணசேகரன் ஆகியோர்களது வாக்குமூலங்கள் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் பெற்று அதன் அடிப்படையிலேயே புகார் மனு எழுதுவதாக அவரது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சிகளிடமிருந்து தகவல்கள் கோரியுள்ளதாகவும், அவை கிடைக்கப்பெற்றவுடன் ஆதார ஆவணங்களாக சமர்ப்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையானது புகார்களை எழுதிவிட்டு பின்னர் ஆதாரங்களை சேகரிப்பது போல உள்ளது. இந்நிலை ஏற்பதற்கில்லை மேலும் புகாருக்குட்பட்ட முன்னாள் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் புகாருக்குட்பட்ட திருமண மண்டபங்கள் செங்கல்பட்டு நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநரின் அனுமதியின் பேரிலேயே உரிய கட்டணங்கள்

பெறப்பட்டு பேரூராட்சி மூலம் அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் தனது குற்றச்சாட்டுகள் குறித்து ஆதார ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காத நிலையில் நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி செயல் அலுவுலரால் அளிக்கப்பட்ட அறிக்கை ஏற்கப்பட்டு முறையீட்டு மனு தள் ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது. மேலும், நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தற்காலிக கணினி உதவியாளர், அலுவலக உபகரணங்கள் மற்றும் ஆவணங்களை முறைகேடாக பயன்படுத்துவது தொடர்பான செயல் அலுவலரது குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

செயலாளர்.

பெறுநர்

1.திரு E. கோவிந்தராஜன்,
எண்.10, திருவீதியம்மன் கோவில் தெரு,
கிருஷ்ணாபுரம்,.
நந்திவரம் கூடுவாஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்–603202.

2.திரு.த.குணசேகரன்,
செயல் அலுவலர்,
மாங்காடு பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3.செயல் அலுவலர்,
நந்திவரம் கூடுவாஞ்சேரிபேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்
உதவிப் பிரிவு அலுவலர்(ஊராட்சிகள்) தகவலுக்காக.